முருகப்பெருமான் துணை

**மகான் சங்கமுனிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.06.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. அன்னதானம் ஞானபலமாக
அகிலத்தில் புதுமை படைத்திட
அண்ணலாக வரமருளும் அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது விடைதிங்கள்
குறைவிலா எழுநான்கு திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 28 ம் நாள், 11.06.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க சங்கமுனிச்சித்தர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உலகை ஞானவழி மாற்ற
ஞானபண்டிதன் அம்சமாக வந்த
ஞானதேசிகனை கலியினில்
4. கலியினில் அடையாளம் கண்டு
கந்தனே என வந்து சேர்ந்திட
அழியாமைதனை உலக மக்கள்
அரங்கனால் அடைந்து உயர்வர்
5. உயர்வுதரும் கலியின் சிறந்த
உண்மை பொருள் உணர்த்தும்
தயவே நிறைந்த ஞானி அரங்கனே
தக்கபடி குருவாக ஏற்று
6. ஏற்று சரணாகதி கொண்டு
இணைந்து சன்மார்க்க நெறி
பற்றியே உண்மைபட வாழ்பவர்கள்
பாரினில் ஆறுமுகனார் ஆசிபட

7. ஆசிபட ஞானவான்களாகி
அகிலத்தையே மாற்றவல்ல
வாசிவென்ற மேன்மக்களாய்
வள்ளலாகவும் தேறி வருவர்
8. வருகவே இந்தவித பலங்கள்
வையகம் எங்கிலும் பரவிட
முருகப் பெருமான் வெளிப்படும்
முழுமை பெற்ற ஞானசித்தர்
9. ஞானசித்தர் காலமாகக் கனிந்து
ஞானபண்டிதன் தலைமையும்
ஞான ஆட்சிக் காலமாகவும்
நாட்டிடுவேன் உலகம் மாற்றம் பெறும்
10. மாற்றம் தரும் அரங்கமகானை
மண்ணுலகம் போற்றி வருக
ஆற்றல் கூடி மகா சக்திகளும்
அகிலம் எங்கிலும் இறங்கி
11. இறங்கி சர்வபாதுகாப்புடன்
எல்லா வகையிலும் முழுமை
வரங்களாகப் பெருகி இனிதே
வருங்காலம் வையகம் மேன்மை காணும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—